திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)

Open Access & Peer Reviewed Journal

E-ISSN : 2583-0449

A Women within a Man: Ki. Rajanarayanan's "Gomathi"

Dr. N. Karthigadevi

Assistant Professor, Department of Tamil, Saraswathi Narayana College, Madurai, India

Manuscript ID :
MT128A0075

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 11.10.2022
Revised: 12.10.2022
Accepted: 19.10.2022
Published: 26.10.2022

Pages : 13-16

DOI:
10.5281/zenodo.7372224

ABSTRACT:

This article deals with the problems faced by a transgender in the agrarian Tamil Society as per the short story "Gomathi Chettiar" written by Ki. Rajanarayanan. The author claims that a little sympathy from me common public towards the transgenders will light their life.

KEYWORDS:

Gomathi Chettiar, Ki. Rajanarayanan, Transgender

தோடுடைய செவியன்: கி. ராவின் 'கோமதி'

முனைவர் ந. கார்த்திகாதேவி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பெண்ணாகப் பிறந்தாலே மிகுந்த துன்பத்துக்கு உள்ளாக வேண்டிய சமுதாயத்தில், திருநங்கையாகப் பிறந்து கோமதி பட்ட அவலத்தை சொல்வதுதான் கி. ராவின் "கோமதி செட்டியார்"! எந்தக் கஷ்டத்துக்கும் தீர்வு அனுதாப வார்த்தைகள்தானே. அந்த அனுதாப வார்த்தைகளையாவது திருநங்கையருக்கு நாம் வழங்கினால், அவர்களின் கண்ணீர் கொஞ்சம் குறையும் அல்லவா.

கருச்சொற்கள்

கோமதி செட்டியார், கி. ராஜநாராயணன், திருநங்கை

முன்னுரை

யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானுங் கண்டேன் காண்க

திருவாசகம் - திருவண்டப்பகுதி

"தோடுடைய செவியன்" என்றுதான் ஞானசம்பந்தர் தம்முடைய தேவராத்தைத் துவங்குகின்றார். இறைவன் எப்போதும் தாய்மை குணத்துடன் தான் இருக்கின்றான். அந்தத் தாய்மைக் குணத்தால்தான் அணுகுவதற்கு எளியவனாகவும் இருக்கின்றான். உலகில் உள்ள உயிர்கள் அனைத்துமே பெண் தன்மையும், ஆண் தன்மையும் கலந்துதான் உள்ளன. இந்தக் கலவையின் விகிதம் மாறும் போது நடக்கும் ஒரு விபரீதம் தான் கி. ராவின் 'கோமதி'.

கோமதி செட்டியார்

முப்பது வயது என்பது இளமையின் உச்சம், முதுமையின் ஆரம்பம். எனவே மனதின் தேடலும் உயிரின் தேடலும் ஏன் உடலின் தேடலும் உச்சத்தில் இருக்கும் பருவம் அது. கோமதி செட்டியாருக்கு வயது முப்பது என்று கி. ரா கதையை ஆரம்பிக்கும் சூட்சுமம் அதுதான்.

ஒரு பெண்ணுக்கு காதல் வருவதை எழுதுவது என்பது சாதாரணமானது. உடம்பால் ஆணாகவும் மனதால் பெண்ணாகவும் இருக்கின்ற கோமதி எனப்படும் முப்பது வயது கோமதி செட்டியாருக்குக் காதல் வந்த கதையைச் சொல்லுகின்றார் கி. ரா.

வர்ணாசிரமம் ஆண்களுக்குத்தான் ஜாதி என்று சொல்கின்றது. பெண்கள் எல்லோருமே சூத்திரர்கள்தான். அவர்களுக்கு ஜாதி அடையாளம் கிடையாது. எனவேதான் கி. ரா. கோமதி செட்டியார் என்று கதையைத் துவங்கினாலும், தன்னுடைய கதை முழுவதும் அவனைக் கோமதி என்றே அழைக்கின்றார்.

ஆணாகப் பிறந்த கோமதி ஏன் மனதளவில் பெண் ஆனாள்? ஏழு பெண்களுக்குப் பிறகு பிறந்ததாலா? பூ, பொட்டு, வளையல்கள் என்ற அலங்காரங்களினாலா? குழந்தைத் திருமண விளையாட்டில் பெண் வேடம் விரும்பி ஏற்ற கோமதி ஒரு குழந்தையாகவே இருந்து விட முடியுமா என்ன? கோமதியும் வளர்ந்து வந்தான் நடை, உடை, பாவனை, அலங்காரம் எல்லாம் அச்சு அசல் பெண்ணாக. பெண்களும் தங்கள் கூட்டத்தில் ஒருத்தியாகவே கோமதியைச் சேர்த்துக்கொண்டனர்.

கருப்பும் சிகப்புமாய் - நான்
கலந்துடுத்தும் நாளையிலே
சிகப்பும் கருப்புமாய் - நான்
சேர்ந்துடுத்தும் நாளையிலே
நீலமும் பச்சையுமாய் - நான்
நிரந்துடுத்தும் நாளையிலே
கைக்களையன் சேலையை - என்
கழுத்திலிட்டுப் போனியளே
கைக்களையன் சேலை; எந்தன்
கழுத்தை அறுக்காதே
ஈழுவன் சேலை; எந்தன்
இடுப்பை முறிக்காதே

என ஒப்பாரி பாடி விதவைப் பெண்களையும் பாலியல் கதைகளைச் சொல்லி குமரிப்பெண்களையும் கோமதி மனம் மகிழச் செய்தான். சமையல் கலையும் கை வந்ததால், கோமதிக்கு எல்லா வீடுகளிலும் வரவேற்பு கிடைத்தது. ஆனால் கோமதிக்குத் தான் எங்கேயும் மனம் லயிக்கவில்லை. ஆறு கடலைத் தேடிச் செல்வது போல, கோமதியும் தான் சென்றடைய வேண்டிய கடலைத் தேடிக் கொண்டே இருந்தான்.

அந்தக் கடல் யார், அந்தக் கடல் கோமதி என்னும் ஆற்றை ஏற்றுக் கொண்டதா? அதன் பிறகு கோமதி என்னும் நதியின் நிலை என்ன? என்பது தான் கதை.

ஒரு திருமண வீட்டிற்கு வந்திருந்த அழகிய, வசதியான பெண்களுடன் கலந்து பேசிய கோமதி அவர்கள் அழைப்பின் பேரில் அவர்களுடைய வசதியான வீட்டின் சமையல்காரனாகச் சென்றான். அங்குதான் தன்னுடைய மனதுக்குப்பிடித்த ரகுபதியையும் கண்டான். சீதைக்கு மட்டும் என்ன கோமதிக்கும் ரகுவை கண்டவுடன் காதல்தான். பாவம் ரகுபதிக்கு விவரம் போதவில்லை. ஆண்கள் என்றுமே அசடுதானே.

ஒரு ஆடவனின் மனத்தைச் சென்றடைவதற்கான வழி, அவனுடைய வயிற்றின் மூலமாகத்தான் என்று ஒரு ஆங்கிலப் பழமொழி சொல்கின்றது கோமதி தனக்குக் கைவந்த சமையல் கலையின் மூலமாகத் தன் நாயகனைக் கவர முயற்சிக்கின்றான்.

அந்த நாயகனான இரகுபதியோ, கோமதியைப் புரிந்து கொள்ளாமல் அடித்து விட்டு, அதற்குப் பிராயச்சித்தமாக கோமதிக்குப் பிடித்த செவ்வந்திப்பூ மற்றும் கருவளையல்களைப் பரிசாகத் தந்துவிட்டு தன் வழியே சென்று விடுகின்றான். பிரிந்து சென்ற நாயகனை நினைத்து கோமதி உருகி அழும் காட்சியுடன் கதை நிறைவடைகின்றது.

முடிவுரை

கோமதிக்கு விடிவு காலம் கிட்டுமா என்ன? நம்முடைய சமூக அமைப்பு மிகக் கொடூரமாக திருநங்கைகளையும் திருநம்பிகளையும் நடத்துகின்ற சூழ்நிலையில் அது சாத்தியமா என்ன? கூத்தாண்டவர் கோயிலில் தாலியை அறுத்துவிட்டு அழும் திருநங்கைகள் அரவானுக்காகவா அழுகின்றார்கள்? தங்களுக்கு ஏற்பட்டுள்ள விடியாத இரவுகளை நினைத்து அல்லவா அழுகின்றனர். அவர்கள் நிலையைப் பார்க்கும் நாமும் கையறு நிலையில் அல்லவா இருக்கின்றோம். நம்முடைய இரண்டு சொட்டுக் கண்ணிரும் கனிந்த பேச்சும் அவர்களின் இரணங்களுக்கு மருந்து ஆகலாம்.

எட்ட இருக்கும் சூரியனைப் பார்த்து
மொட்டு விரிக்குது தாமரை,
தொட்டு விடாத தூரம் இருந்தும்
சொந்த பந்தமோ போகல.

வைரமுத்து

துணைநூற்பட்டியல்

1. சுப்பிரமணியப்பிள்ளை. கா - திருவாசகம் மூலமும் உரையும், இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை - 1955
2. ராஜநாராயணன். கி - மாயமான், காலச்சுவடு, நாகர்கோவில் 2021

REFERENCES

1. Subramaniyapillai. K - Thiruvasagam Mulamum Uraiyum, Irathathin nayagar sons, Chennai - 1955
2. Rajanarayanan. Ki - Maayamaan, Kalachuvadu, Nagarcoil 2021